# தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
# தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சு

***DCS/DG/PRESS TEL:011-2877959 FAX:011-2147447 யூன் 2016***

## ஊடக அறிவித்தல்

### *இலங்கை சனத்தொகையினரின் ஆயுள் எதிர்பார்ப்பைக் கணித்தல்*

## *ஆயுள் அட்டவணைகள் 2011-2013*

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களமானது, 2011-2013 இற்கான இலங்கையின் ஆயுள் அட்டவணைகளை வெளியிட்டுள்ளது. இந்த ஆயுள் அட்டவணைகளானது நாட்டின் சனத்தொகையினரின் எதிர்பார்க்கும் ஆயுள் காலத்தை அறிவதற்கான ஆலோசனையைத் தருகிறது. இலங்கையானது ஆயுள் அட்டவணைகள் தொடர்பான நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது. முதலாவது அட்டவணையானது 1888 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இவ் ஆயுள் அட்டவணைகளானது வழமையாக 1901 இலிருந்து தொகைமதிப்பு ஆண்டுகளில் வெளியிடப்பட்டு வருகின்றது. 2011-2013 இற்கு முன்னரான ஆயுள் அட்டவணைகள் 2000-2002 இல் வெளியிடப்பட்டன.

ஆயுள் அட்டவணை தயாரிக்கப்படும்போது, அடிப்படையாக வயதுசார் இறப்பு வீதம் பயன்படுத்தப்பட்டுகிறது. அத்துடன் பிறப்பின்போதான ஆயுள் எதிர்பார்ப்பு, ஒருவரின் குறித்த வயதுக் குழுக்களுக்கான ஆயுள் எதிர்பார்ப்பு, குறித்த வயதுக் குழுவானது உயிர்வாழ்ந்து அடுத்த வயதுக்குழுவை எய்தக்கூடிய பொருத்தப்பாடு மற்றும் ஒரு வயதுக் குழுவிலிருந்து அடுத்த வயதுக் குழுவிற்குச் செல்லக்கூடிய சாத்தியக்கூறு போன்றவற்றை ஆயுள் அட்டவணையிலிருந்து அளவிட முடியும். இத் தகவல்கள் கல்வி, சுகாதாரம், காப்புறுதி மற்றும் காப்பீட்டு விஞ்ஞானம் போன்றவற்றுக்கான பல்வேறுபட்ட ஒழுங்கமைப்புகளுக்கு நடைமுறையில் பாரியளவில் முக்கியத்துவம் பெறுகிறது.

ஆயுள் அட்டவணைகள் தயாரிக்கப்படும்போது நிலையான கொள்கையாக ஆண்களுக்கும், பெண்களுக்கும் வெவ்வேறாகத் தயாரிக்கப்படுகிறது. ஆயுள் அட்டவணை உருவாக்கப்படும்போது அடிப்படை உள்ளீடாக தொகைமதிப்பு ஆண்டுக்கு மூன்று வருடங்கள் முன்பான வயது அடிப்படையிலான இறப்பு வீதம் கருத்திற்கொள்ளப்படுகிறது. தேவைப்படும் தரவானது வயது மற்றும் பால் ரீதியான சனத்தொகைப் பரம்பல் மற்றும் வயது மற்றும் பால் ரீதியான இறப்புக்களின் பரம்பல் மூலம் பெற்றுக் கொள்ளப்படுகிறது. சனத்தொகைத் தரவுகள் தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட குடிசனத் தொகைமதிப்பின் மூலமும், இறப்புக்கள் பதிவாளர் நாயகத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படும் "குடிசார் பதிவு முறை" மூலமும் பெற்றுக்கொள்ளப்பட்டன. 2011-2013 ஆயுள் அட்டவணை தயாரிக்கும்போது, 2012 இல் இடம்பெற்ற குடிசனத் தொகைமதிப்பில் பெறப்பட்ட குடிசனத் தொகைமதிப்புத் தகவல்களும் மற்றும் 2011, 2012 மற்றும் 2013 இல் இடம்பெற்ற இறப்புக்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கையில், 2011-2013 வருடத்திற்கான ஆண்களின் ஆயுள் எதிர்பார்ப்பு 72.0 வருடங்களாகவும், பெண்களின் ஆயுள் எதிர்பார்ப்பு 78.6 வருடங்களாகவும் காணப்படுகிறது. 2001 இற்குரிய ஆண்களதும், பெண்களது ஆயுள் எதிர்பார்ப்பு முறையே 68.8 மற்றும் 77.2 வருடங்களாகும். ஆண் பெண் இருசாராரினதும் ஆயுள் எதிர்பார்ப்பு 2001 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2012 ஆம் ஆண்டு அதிகமாகக் காணப்படுகிறது. பெண்கள் மற்றும் ஆண்களுக்கிடையேயான ஆயுள் எதிர்பார்ப்பு பிறப்பின்போதான ஆயுள் எதிர்பார்ப்பு 2012(6.6) ஆனது 2001(8.4) உடன் ஒப்பிடுகையில் சிறிதளவு குறைவடைந்துள்ளது. ஆயுள் அட்டவணையானது இலங்கையில் தேசிய மட்டத்திலும், அனைத்து மாவட்ட மட்டத்திலும் தயாரிக்கப்பட்டுள்ளது. இவ் ஆயுள் அட்டவணைகளானது தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்டு திணைக்கள இணயத்தளமான www.statistics.gov.lk இல் வெளியிடப்பட்டுளது.

கலாநிதி ஏ. ஜே. சத்தரசிங்க,
பணிப்பாளர் நாயகம்
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்